மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர்களைச் சோதிக்கிற மாதிரி கேள்வி போட்டால் எப்படி?

திரு. என். கிட்டப்பா: தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் தாலுகாவில் மண்ணிப்பள்ளம் என்ற ஊரில் ஆர்டிஷியன் வெல்கள் இயங்கி வந்தன. அதிலிருந்து சரியான முறையில் தண்ணீர் கிடைத்த நிலையில் கூட சில ஆண்டுகளாக அவை இயங்கவில்லை. இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எடுத்துக் கூறியும் இன்னும் இயங்காத நிலையில்தான் இருந்து வருகிறது. அந்த ஊரில் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கும் காரணத்தால் மீண்டும் அவற்றைச் செயல்படுத்துவதற்கு நமது அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கேள்வியின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

Development of Ports

* 203 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state:

(*a*) whether the Government have requested the Centre to allot funds for the development of Nagapattinam harbour as a major port by constructing an artificial harbour; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) & (இ) இல்லை. மேஜர் போர்ட்டாக—பெரிய துறைமுகமாக ஆக்கப்படுவதற்குப் போதிய ஏற்றுமதி இறக்குமதி இல்லை.

மு.ப. 10–00

திரு. என். கே. பழனிசாமி: நாகப்பட்டினம் துறைமுகம் அவசியம் என்பதை எல்லோரும் உணருவார்கள். அதன் அடிப்படையில் செயற்கைத் துறைமுகமாக அதை அமைப்பதற்கு மத்திய சர்க்கார் ஒப்புதல் கொடுத்தார்களா? திட்டம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: நாகப்பட்டினத்தை மேஜர் போர்ட்டாக ஆக்கும் அளவிற்கு ஏற்றுமதி இறக்குமதி இல்லையென்று சொன்னேன்.

1973 மார்ச் 1]

Dr. H. V. HANDE: Sir, in view of the fact that we are not able to have enough traffic in Madras Port, will it not be possible for the State Government to stress upon the Central Government and see to it that not only Nagapattinam, but certain other small ports which are on the coast line could be activised? The Hon. Minister also assured about Cuddalore sometime ago that it would be activised. Can Government do that so that there can fair distribution throughout the coast line ?

The Hon. Thiru Si. Pa. ADITHANAR: Sir, the Nagapattinam port is not having enough traffic. That is the point I answered. The Cuddalore Port has been improved at a cost of Rs. 1.75 crores and also the Tuticorin port is being improved as a major port at a cost of Rs. 23 crores.

* 204 Q.—Thiru N. K. PALANISWAMY: Will the Hon the Minister for Co-operation be pleased to state:

(a) whether there is any proposal under the consideration of the Government to develop Colachel Port in Nagercoil; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ): கொளச்சலில் ரூ. 53,000 செலவில் கடலோரச் சாலை அமைக்கப்பட்டு முடிந்திருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 20 லட்சம் செலவில் ஒரு ஜெட்டி அதாவது பாலம் அமைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. நாகர்கோவிலைப் பொறுத்தவரையில் அங்கு துறைமுகத்தை மேம்படுத்தும் பிரச்சனை எழவில்லை. ஏனென்றால் அங்கு துறைமுகமே இல்லை.

திரு. என். கே. பழனிசாமி: நாகர்கோவிலில் உள்ள கொளச்சல், அதுதான் கேள்வி. நாகர்கோவிலில் எப்படி துறைமுகம் இருக்கமுடியும்? மீன்பிடி துறைமுகமாக இருப்பதை இன்னும் அதிகப்படியாக செலவு செய்து பெரிய துறைமுகமாக ஏற்படுத்த முயற்சி செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நாகர்கோவில், கொளச்சல் என்று எழுதியிருக்கிறார்கள், இரண்டையும் பற்றி. நாகர்கோவில் பற்றி இயலாது என்று சொன்னேன். கொளச்சல் பற்றி ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இருபது லட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலம் அமைக்கவேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொன்னேன்.